# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 33

# அந்திக்கிறிஸ்து பற்றின ஆராய்ச்சி

பாகம்-2




## The Study of Antichrist

Part - 2

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# அந்திக்கிறிஸ்து பற்றின ஆராய்ச்சி பாகம்-2



# The Study of Antichrist Part-2

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

அந்திக்கிறிஸ்து பற்றிய ஆராய்ச்சியின் இரண்டாம் பாகத்தில், அந்திக்கிறிஸ்து குறித்த ஆழமான சத்தியத்தை அறிய முற்படலாம். கடந்த பாடத்தில் அந்திக்கிறிஸ்து என்பது தனி மனிதனல்ல என்றும், அந்திக்கிறிஸ்து எதிர்காலத்தில் உலகம் முழுவதையும் ஆளுகை செய்யப்போகிற இராஜாவும் அல்ல என்றும் பார்த்தோம்.

அக்கிரமத்தின் இரகசியம் என்று **(2தெசலோனி2:7,8)** அழைக்கப்படும் இந்த அந்திகிறிஸ்து, அப்.பவுலின் காலத்தில் ஆதிகால சபையிலேயே வெளிப்படத் துவங்க, பின்பு இயேசுவின் 2ம் வருகை முற்றிலுமாக அழிக்கப்படுவான். இதன்மூலம் அந்திக்கிறிஸ்து நீடித்திருக்கும் காலமானது 2000 வருடங்கள் என கணக்கிடப்படுகிறது.

கண்டிப்பாக, மனிதர்களில் ஒருவனும் இவ்வளவு நீண்ட காலம் ஜீவிக்க முடியாது. இதன்மூலம் அந்திகிறிஸ்து ஒரு தனிநபராக இருக்கமுடியாது என்று அறிந்தோம். மாறாக, இது உண்மை சபைக்குள்ளேயே நடைபெற்றுவரும் மாபெரும் அமைப்பாகும். மேலும் இந்த அமைப்பிற்கு முன்கூட்டியே 1260 வருடங்கள் அதிகாரம் தரப்பட்டு மிகவும் வல்லமையுடன் நடைபெற்று வரும் '**அக்கிரமத்தின் இரகசியம**' " ஆகும்.

இந்த ஒரு அமைப்பையும் அதைக் குறித்த விபரங்களையும் தேவனுடைய வசனத்தின் மூலம் நிதானமாக அறிய முற்படுவோம்.

**தானியேல் 7:20,22**

"மற்றவர்களைப்பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்த அந்த வேறே கொம்பைக் குறித்தும்.. இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன் "

இவ்வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ' **பரிசுத்தவான்கள்** " கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களும், உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களுமாய் இருப்பதை வாசிக்கிறோம். இவர்கள் "இயேசுவை" உண்மையாக பின்பற்றும் சீஷர்கள் ஆவர். அப்படியானால், **அந்த கொம்பு**" 4ம் மிருகத்திலிருந்து

முளைத்தது. முளைத்தபோது முன்னிருந்த கொம்புகளில் மூன்று கொம்புகள் பிடுங்கப்பட்டது.

நாம் ஏற்கனவே பார்த்த “ஐந்தாம் உலப்பேரரசு”பாடத்தில், இந்த நான்காம் மிருகம் நான்கு உலகப் பேரரசுகளில் நான்காவதாகத் தோன்றி, உலகம் முழுவதையும் ஆளுகை செய்த ரோமப் பேரரசைக் குறிக்கிறது. இந்தக் கொம்புகள் எதைக் குறிக்கிறது?

இங்கு சொல்லப்பட்ட 10 கொம்புகள் ரோம சாம்ராஜ்யத்தில் இருந்த 10 பிரிவுகளாகும். தானியேல் 7:24ல் ,”அந்த 10 கொம்புகளும் 10 ராஜாக்களாம்” என பார்க்கிறோம். ஆக அந்த சின்னக்கொம்பும் ஒரு இராஜ்யம் அல்லது இராஜாவைக் குறிக்கும். அந்த சின்னக்கொம்பு - “முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருப்பான்” என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த ராஜா யாராக இருக்கக்கூடும்? ரோமர்களின் வரலாற்றை ஆராயும்போது இந்த வேறுபட்ட ராஜாவை நாம் அடையாளங் காணமுடிகிறது. ஆம், அவன் சபையிலிருந்து வருகிறவனாய் இருக்கிறான். இக்காரியத்தை இனி தெளிவாக நிதானித்துப் பார்ப்போம் -




**1தீமோத்தேயு 3:1**

“கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்.
இது உண்மையான வார்த்தை”

கண்காணிகள் சபைகளை மேற்பார்வையிடுகிறவர்களாகவும், சபைகளை வழிநடத்தும் மூப்பர்களுக்கு உதவிசெய்வோராகவும் இருந்தனர். அப்போஸ்தலர்கள் அனைவரும் இப்படிப்பட்ட கண்காணிகள் ஆவர். ஒரு குறிப்பிட்ட பகுதியில் கண்காணியாக இருப்பவர்கள், அவர்களுடைய பகுதியில் உள்ள சபைகளை சந்திக்க எப்பொழுதும் பிரயாணத்தில் இருப்பார்கள். இவர்கள் அவ்வப்பொழுது ஒவ்வொரு பகுதியிலும் இருந்துவந்து, சந்தித்து இயேசுகிறிஸ்துவின் சபையின் அனைத்துக் காரியங்களையும் ஆலோசித்து தீர்மானிப்பது வழக்கமாயிருந்தது. இவ்விதமாக வெவ்வேறு பகுதிகளில் கண்காணிகள் அநேகர் இருந்தனர்.




இவர்கள் அனைவரிலும் ரோம கண்காணி சற்று வேறுபட்டிருந்தார். இவர் ஒட்டுமொத்த உலகிற்கே தலைவர். இவர்மூலம், ரோம சபையின் கண்காணி சக்கரவர்த்தி கான்ஸ்டான்டின் பேரரசன் கிறிஸ்தவராக “மனம்மாறினார்”.

கான்ஸ்டான்டின் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினபின்பு, ரோம கண்காணியானவருக்கு ரோம சக்கரவர்த்திகள் மூலம் சலுகைகளும்

புகழ்ச்சியும் குவியத்துவங்கின. இதன் விளைவாக ரோம கண்காணி மற்ற கண்காணிகளை சந்திக்கும்பொழுது மிக உயர்ந்த ஸ்தானத்தையும் மகிமையையும் தனக்கு ஏற்படுத்திக்கொள்ள ஆரம்பித்தார்.

இவர் தனக்கு “தந்தை” என்ற பட்டம் சூட்டிக்கொண்டார். இதற்கான லத்தீன் பதம் “பப்பா (Papa)” . ஆங்கிலத்தில் இப்பட்டமானது போப்(Pope)என்று பிரபலமானது.

இந்தப் பட்டமும், சபையில் ஆதிக்கம் செலுத்தியதும் வேத வசனங்கள் அங்கீகரிக்காதவைகளாகும்

**எபேசியர் 1:22,23**

“எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்குஅவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”

இவ்வசனம் இயேசுவை சபைக்கு தலையாக தேவன் நியமித்ததை குறிக்கிறது. மேலும்,

**மத்தேயு 23: 8,9**

“நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்.கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்”

இங்கும் ‘**ரபீ**“ என்று அழைக்காதிருங்கள் என்ற உறுதியான எச்சரிப்பைக் காண்கிறோம். ஆனால் ‘போப்” என்ற இந்தப் பட்டமானது, பின்வந்த ஒவ்வொரு கண்காணியாலும் உரிமை கொண்டாடப்பட்டு, மதம் சம்பந்தப்பட்ட காரியங்களில் மாத்திரமல்ல, அரசியல் சார்ந்த காரியங்களிலும் படிப்படியாக வல்லமையிலும், ஆதிக்கத்திலும் உயர்ந்தனர். இவ்வாறு ரோம அரசர்களிலிருந்து இந்தக் ‘**கொம்பு**” வேறுபட்டதாக காணப்பட்டு, முளைத்து, வளர்ச்சியடைந்தது. போப்பு மார்க்கத்தின் இந்த வளர்ச்சியை பின்வரும் வேத வசனங்களில் காண்கிறோம் -

“..அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்னக்கொம்பு எழும்பிற்று. அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது”

‘**அதற்கு முன்பாக**” என்ற வார்த்தையை நாம் இங்கு கவனிக்கவேண்டும். இது போப்பு மார்க்கம் ஸ்தாபிக்கப்பட்ட காலகட்டத்தை அடையாளம் காணுவதற்கான முக்கிய சம்பவமாகும்.

**‘மூன்று கொம்புகள்”** - போப்பு மார்க்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, ஆளுகை முடிவுக்கு வந்த மூன்று இராஜ்யங்களைக் குறிக்கும்.

ஆனால் வரலாற்றை கவனிக்கையில், போப் லியோ- பிரான்ஸ் தேசத்தின் சக்கரவர்த்தியான பெப்பின் மற்றும் அவருடைய மகன் சார்லிமேன் ஆகியவர்களோடு ஒப்பந்தம் செய்து,

*பரிசுத்த ரோம சாம்ராஜ்யம்*

என்று அழைக்கப்பட்ட சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு பரிசுத்த என்பது இந்த சாம்ராஜ்யம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்று பறைசாற்றிக்கொண்டதைக் குறிக்கிறது. இது கிபி 799ல் சம்பவித்தது.

அன்று முதல் போப்புக்களின் ஆளுகை முழுமையான அதிகாரத்துடன் துவங்கியது. இதன்மூலம், வேதத்தில் அந்திக்கிறிஸ்து என்றும், போலியான கிறிஸ்தவ அமைப்பு என்றும் அழைக்கப்படுகிற போப்பு மார்க்கத்தை இப்பொழுது நாம் அடையாளம் காண்கிறோம்.

ஆனால் ரோமன் கத்தோலிக்க சகோதர சகோதரிகளை அந்திக்கிறிஸ்துக்கள் என்று கருதுவது தவறான கருத்தாகும். இங்கு அந்த அமைப்பை மட்டுமே குறிப்பிடுகிறோமே தவிர, அந்த அமைப்பிற்குள் அறியாமையினால் தங்களை ஒரு அங்கமாக இணைத்திருப்பவர்களை அல்ல. இவ்விதமாக, போப்பு மார்க்கமே அந்திக்கிறிஸ்து என்று அடையாளம் கண்டபிறகு, இதை வேத வசனங்களின் மூலம் உறுதிப்படுத்துவது அவசியமாகிறது -

**தானியேல் 7:25**

"உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பெசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான் (போப்பு மார்க்கம்). அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்"

இது எதைக் குறிக்கிறது என்று காணலாம் -

**'உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி .."** - இந்த வார்த்தைகளை அந்திக்கிறிஸ்து அமைப்பானது தேவனுக்கு விரோதமாக பேசுவதாக கூறப்பட்டுள்ளது.

தற்போதைய போப். பிரான்சிஸ்



இது எவ்வாறு நிறைவேறினது? போப்பு மார்க்கமானது தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்றும், தனக்குத்தானே பெருமையான பட்டங்களைச் சூட்டிக்கொண்டும், தேவனையும் சத்தியத்தையும் தவறாக பிரதிபலித்ததன்மூலம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பட்டங்கள் அனைத்தும் தேவனை தூஷிப்பவைகளாகும். அவர்கள் மொத்தமாக 62 தேவ தூஷணமான பட்டங்களைப் பயன்படுத்தினர். இதில் சிலவற்றை மாத்திரம் ஆராய்வோம் -

**'எல்லாத் தலைவர்களுக்கும் மேலான தெய்வீகத் தலைவர்"** - இவர்களுடைய தலைமை தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்று தவறாக பறைசாற்றும் பட்டமாகும்.

**'எல்லா தந்தைகளுக்கும் மேலான பரிசுத்த தந்தை"** - தந்தை என்று அழைக்கப்படுவதற்கு அவர்கள் தெய்வீக உரிமையை உடையவர்கள் என்று தவறாக பறைசாற்றுகின்ற பட்டமாகும்

**'கிறிஸ்தவ மதத்தின்மேல் கண்காணியானவர்"** - இது ஒட்டு மொத்த சபைக்கும் தலைமை என்று தவறாக பறைசாற்றுகின்ற பட்டமாகும்

**'மோசேயின் அதிகாரம் உடையவர்"** - இது இஸ்ரயேல் தேசத்தின்மீது மோசே பெற்றிருந்த அதிகாரத்தைப்போன்று தேவனுடைய ஜனங்கள் மீது தெய்வீக அதிகாரத்தை பெற்றவராக தவறாக பறைசாற்றுகிற பட்டமாகும்

**'மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான அதிகாரம்"** - கிறிஸ்துவுக்கு மாத்திரம் சொந்தமான இராஜரீக ஆசாரியத்துவத்தை பறைசாற்றுகின்ற மோசமான தேவதூஷணமான பட்டமாகும். இதன்மூலம் சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருக்கும் ஆசாரியர்களாக போப்புகள் தங்களை பறைசாற்றுகின்றனர்.

**'அப்போஸ்தலரின் வாரிசு"** - இயேசு, பேதுருவை அப்போஸ்தலரின்மீதும், சபையின்மீதும் தலையாக நியமித்தார் என்றும், அந்தவழியில் பேதுருவின் ஸ்தானத்தைத் தொடர்கிறவர்கள் போப்புகள் என்று தவறாக பறைசாற்றும் தேவதூஷணமான பட்டமாகும்

**'பரிசுத்த சபைகள் எல்லாவற்றிற்கும் மேலான தலைமை சபை, கண்காணிகளுக்கு கண்காணியானவர், சர்வ வல்லமை படைத்த மதத்தலைவர்"** - உலக முழுவதும் உள்ள இயேசுகிறிஸ்துவின் சபை மீதான தலைமையை பெற்றிருப்பதாக பறைசாற்றுகின்ற தேவதூஷணமாகும்.இதன்மூலம் மற்ற சபை கண்காணிகள் அனைவர்மீதும் அதிகாரம் செலுத்தக்கூடியவர் என்று பறைசாற்றுகின்றனர்.

**'பரலோக இராஜ்யத்தின் திறவுகோலை உடையவர்"** - இது போப்புகள் பெற்றிருக்கும் பரலோகம் மற்றும் நரகத்தின் இரண்டு திறவுகோல்கள் என்றும், ஆத்துமாக்களை பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்பும் அதிகாரம் உடையவர்களாக கூறும் தேவ தூஷணமான பட்டமாகும்.

**'கிறிஸ்துவின் பிரதிநிதி"** - பூமியில் இயேசுகிறிஸ்துவுக்கு பிரதிநிதியாக தன்னை பறைசாற்றுகின்ற பட்டமாகும்

இவைகளே 'உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசுவான்" என்பதை போப்பு மார்க்கம் நிறைவேற்றினதை நிரூபிக்கும் சில உதாரணங்களாகும்.

**'உன்னதமானவரின் பரிசுத்தவான்களை ஒடுக்குவான்"** - வேதாகமத்தை விசுவாசிப்பவர்கள்மீதும், உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் மீதும் போப்பு மார்க்கம் கொடிய சித்திரவதைகளை செய்ததைக் குறிக்கும்.

**'காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்"** - தேவனுடைய நியாயப்பிரமாணம் மற்றும் காலங்களை போப்புகள் மாற்றி அமைத்ததை குறிக்கும்.
இது நிறைவேறின விதத்தை பின்வரும் வசனத்தில் காண்போம் -

**யாத்திராகமம் 20:4-5**

"மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும்

விசாரிக்கிறவராயிருக்கிறேன்"

மோசேயிடம் தேவன் தந்த 10 கட்டளைகளில் 2ம் கட்டளையை நீக்கிவிட்டு, இன்று விக்கிரக ஆராதனையை சபைக்குள் நுழைத்துவிட்டனர். ஏனென்றால் இக்கட்டளை விக்கிரக ஆராதனைக்கு எதிராக தேவன் தந்த கட்டளையாகும். ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் விக்கிரகாராதனையைக் காணமுடிகிறது. தேவனுடைய பத்தாவது கட்டளையை கீழே நாம் காண்கிறோம் -

**யாத்திராகமம் 20:17**

"பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியையும்,
அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும்,
அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும்
பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்"

இங்கு '**..பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக..**" என்ற பகுதியை ஒன்பதாவது கட்டளையாக மாற்றி, அவ்வசனத்தின் மீதிப் பகுதியை பத்தாவது கட்டளையாக மாற்றியுள்ளனர்.

போப்பு மார்க்கம் '**காலங்களை மாற்ற நினைத்த**' காரியத்தைக் குறித்து, பின் வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

**வெளிப்படுத்தல் 20:5**

"மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை,
இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்"

இது இந்த பூமியில் கிறிஸ்து நீதியாய் ஆளுகை செய்யும் ஆயிர வருட காலமாகும். ஆனால் போப்பு மார்க்கம் தனது பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தபொழுது, அதையே கிறிஸ்துவின் "ஆயிர வருடமாகவும்", கிறிஸ்துவுக்கு பதிலாக அவர்கள் ஆளுகை செய்வதாகவும் உரிமை கொண்டாடினார்கள்.

⇨ இவ்விதமாக கிபி 799 முதல் கிபி 1799 வரையிலான பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் ஆயிர வருட காலத்தை "கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியாக" போப்பு மார்க்கம் கருதியது. இது போலியான ஆயிர வருட அரசாட்சியாகும். ஆனால் கிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகையானது, இயேசுவின் மகிமையான இரண்டாம் வருகைக்குபின்பு நிறைவேறக்கூடியதாயிருக்கிறது.

⇨ இவ்விதமாக 1260 நாட்கள் அல்லது 1260 வருடங்கள் அனுமதிக்கப்பட்ட வல்லமையை போப்பு மார்க்கமே அந்த அந்திகிறிஸ்து அமைப்பு என்று அடையாளம் காண்கிறோம்.

⇨ போப்பு மார்க்கத்தின் ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவு, போப் பயஸ் அவர்களை பிரான்சின் நெப்போலியன் போனபார்ட் கைது செய்து, ஒவ்வொரு சிறையாக மாற்றி, இறுதியில் சிறையிலேயே மரித்ததன் மூலம் போப்பு மார்க்கத்தின் அதிகாரம் 1799ல் முடிவுக்கு






வந்தது.

இந்த அதிகாரம் 1799ல் முடிவடைந்ததென்றால், எப்பொழுது இந்த அதிகாரம் தொடங்கினது?

| 1799 | - | 1260 | = | கிபி 539 |
|---|---|---|---|---|
| (போப்புமார்க்க அதிகாரத்தின் முடிவு) | - | (அதற்கு அனுமதிக்கப்பட்ட வருடங்கள்) | = | (அதிகாரம் துவங்கின ஆண்டு) |

போப்பு மார்க்கத்தின் அதிகாரம் துவங்கின தேதியோடு இது இசைவாகப் பொருந்துகிறது.

எப்படியெனில், கிபி539ம் வருடத்தில் ரோம கண்காணியானவர், ஜஸ்டினியன் சக்கரவர்த்தியிடமிருந்து தன்னை ரோம பேரரசின் மத காரியங்கள் அனைத்திலும் தலைமை வகிப்பவர்(பான்டிபிக்ஸ் மேக்சிமஸ் - Pontifex Maximus) என்று அங்கீகரிக்கும் நிருபத்தைப் பெற்றார். அதோடுகூட, அதே வருடத்தில்தான் மூன்று கொம்புகளில் ஒன்றான, மூன்றாவது கொம்பு விழுந்தது.

☆ விழுந்த அந்தக் கொம்பு ஆஸ்ட்ரோகோதிக் சாம்ராஜ்யமாகும். இதற்கு முன்பிருந்த மற்ற இரண்டு கொம்புகள், ஹெருலி மற்றும் கிழக்கு எக்ஸ்ட்ராசட் ஆகும். இதன்மூலம் போப்பு மார்க்கமே தேவ தூஷணமான பட்டங்களை உரிமைகொண்டாடின போலியான கிறிஸ்தவ அமைப்பாக ஆளுகை செய்த அந்திக்கிறிஸ்து அமைப்பாகும்.

**வெளிப்படுத்தல் 13:18**

"இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன், அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு"

இங்கு கூறப்பட்டுள்ள மிருகம், தானியேலின் நான்கு இராஜ்யத்தில், நான்காவதான ரோம ராஜ்யத்தில் இராஜாக்களாக ஆளுகை செய்த போப்புமார்க்க இராஜ்யமாகும்.

☆ இங்கு 666 என்ற இலக்கம் போப்பு மார்க்க இராஜ்யத்தின் இலக்கமாக நம் ஆண்டவர் குறிப்பிடுகிறார். இது பொப்பு மார்க்கம் பிரதானமாக பயன்படுத்திய பட்டமாகிய

# VICARIUS FILLII-DEI

ன் எண் மதிப்பாகும்.

இதற்கு இலத்தீன் மொழியில் - தேவகுமாரனின் பிரதிநிதி VICAR of the son of god(Christ) என்று பொருள். இந்த பட்டப்பெயரை போப்புகளின் கிரீடத்தில் மற்றும் வாட்டிகன் பிரதான வாசலின்மீது எழுதியிருப்பதைக் காணலாம். இதற்கான ரோம எண் மதிப்பை காண்போம் - .







ஆம். இது மனுஷனுடையதும் 'பாவ

மனுஷனுடையதும் - வேதத்தின் அந்திக்கிறிஸ்துவினுடையதுமான எண்ணாகும். இந்த எண் போப்பு மார்க்கத்தையே குறிக்கிறது என்பதற்கான இன்னும் சில ஆதாரங்களை இறுதிப்பக்கத்தில் காண்க.

போப்பு மார்க்கமே வேதத்தில் கூறப்பட்டுள்ள அந்திக்கிறிஸ்து அமைப்பு என்று கண்டறிந்தபிறகு, இந்த உண்மையை வேத வசனங்கள்மூலம் உறுதி செய்வோம்

**1தெசலோனிக்கேயர் 2:3,4**

"எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்"

இங்கு சொல்லப்பட்ட பாவமனுஷனாகிய அந்திக்கிறிஸ்து, விசுவாச துரோகத்தை சபையில் கொண்டுவந்த போப்பு மார்க்கமேயாகும். இவர்கள் சுயமாக, கள்ள போதனைகளை விசுவாச அறிக்கைகளாக தயார்செய்து, வேதத்தைப் பற்றின உண்மை அறிவிலிருந்து கிறிஸ்தவர்களை வழிவிலக்கினர்.

இவர்கள் முதலாவதாக சபையில் நுழைத்த கள்ளபோதனை-

***அழியாத மனித ஆத்துமா*** - மனிதன் தனக்குள் ஒரு ஆத்துமாவைப் பெற்றிருப்பதாகக் கூறி, வேதம் போதிக்கிறபடி - மனிதனே "அந்த" ஆத்துமா என்பதை மறுத்தது(ஆதியாகமம் 2:7). இதன்மூலம் சரீரம் மரித்தாலும் அதன் உள்ளானஆத்துமா மரிப்பதில்லை என்று நம்பப்பட்டது.

அடுத்ததாக, ***நரகம் பற்றின கள்ளபோதனை***

நரகம் ஒரு நித்திய வேதனை ஸ்தலம் என்றும், பாவம் செய்வோரது ஆத்துமா நரகத்திற்குள் செல்லும் என்றும் போதிக்கப்பட்டது. ஆனால் வேதம் போதிக்கிற போதனையின்படி, நரகம் என்பது ஒரு நிலை . மாறாக ஒரு இடம் அல்ல என்று பார்க்கிறோம். போப்பு மார்க்கத்திற்கு விரோதிகள் மற்றும் தீமை செய்தவர்கள் , நித்திய வேதனை ஸ்தலமாகிய நரகத்திற்கு செல்வார்கள் என்று போதிக்கப்பட்டது.

***அடுத்த கள்ளபோதனை - உத்தரிக்கும் ஸ்தலம்***

பரலோகம் செல்லுமளவுக்கு நல்லவர்கள் அல்லாதோர், அதே சமயம் நரகம் செல்லுமளவு தீமை செய்யாதோரது ஆத்துமாக்கள், ஒரு குறிப்பிட்ட காலம் தண்டனை அனுபவித்து சீர்பொருந்தி, பரலோகத்திற்கு தகுதியடைவார்கள் என்று கூறப்பட்டது. ஆனால் வேதத்தில் இப்படி ஒரு போதனை காணப்படவில்லை.

***அடுத்ததாக தோன்றிய கள்ளபோதனை - பாதிரியார்களிடம் பாவ அறிக்கை செய்தல்.***

பாதிரியார்கள் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்பெற்றவர்கள் என்று கருதப்பட்டனர். இந்த கள்ளபோதனையை மார்டின் லூதர் கண்டுபிடித்தார். அவர் சீர்திருத்தலின்போது, கீழ்க்கண்ட சத்தியத்தை வெளிக்கொணர்ந்தார் -

**ரோமர் 1:17**

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது"

***அடுத்து வெளிவந்த கள்ளபோதனை-இயேசுவை மறுபடியும் பலிசெலுத்தும் பூஜைபலி***



இது இயேசுவின் ஈடுபலியின் மதிப்பை இழிவுபடுத்தும் மகா அறுவறுப்பாகும். இந்த பலிபூஜையில் பயன்படுத்தும் அப்பமும் திராட்சரசமும் இயேசுவின் நிஜமான சரீரமாகவும், இரத்தமாகவும் உருமாற்றம் அடைவதாக நம்பப்படுகிறது. இந்த அப்பம் பற்களில் படக்கூடாது, பட்டால் அவர்கள் வாயிலிருந்து இரத்தம் வரும் என்றும் நம்பப்பட்டது.

இதைத்தொடர்ந்து

***பிரமாண்டமான ஆலயங்கள், ஆராதனை ஸ்தலங்களாக கட்டப்படும் கள்ளபோதனை*** உருவானது. இதனால்ஆதிகால சபை சிறிய வீடுகளில் கூடும் எளிமையான முறைமை மறைந்தது.

இதைத்தொடர்ந்து,

***குருக்கள் பொது ஜனங்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்ற கள்ளபோதனை.***

ஆராதனையில் ஜனங்களை வழிநடத்துவதால், தேவனுடைய விசேஷமான ஊழியர்கள் என்ற ஸ்தானத்தை எடுத்தனர். இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் பிரதான ஆசாரியன் அணிவதுபோன்ற உயர்ரக அங்கிகளை அணியத்துவங்கினர்.

இதைத்தொடர்ந்து,

***பரிசுத்தவான்களிடம் ஜெபம் ஏறெடுக்கும் கள்ளபோதனை***. இயேசுவின் வழியாக மாத்திரம் தேவனை ஆராதிப்பது மறக்கப்பட்டு, இயேசுவின் தாயாகிய மரியாள் மற்றும் பரிசுத்தவான்கள் மூலம் ஏறெடுக்கப்பட்டது.

***இதைத்தொடர்ந்து , திரித்துவம் என்னும் கள்ளபோதனை*** .

ஒன்றான மெய் தேவனைக் குறித்த சத்தியம் படிப்படியாக மறக்கப்பட்டு, பிதாவும் குமாரனும் ஒரே நபர் என்று போதிக்கப்படுவது துவங்கியது. சிலகாலம் கழித்து தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்தஆவியும் ஒரு நபர் என்றுகருதி, திரியேக தேவன் என்ற தேவதூஷணம் பிறந்தது.

இதுபோன்ற அநேக கள்ள உபதேசங்கள் நுழைந்ததால், சபையானது மாபெரும் தவறுகளுக்குள்ளாக நடத்தப்பட்டது. இவ்விதமாக 'அந்திக்கிறிஸ்து",

**தேவனுடைய ஆலயத்தில்(சபை)தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாக.." இருந்தான்.**

இப்பொழுது அந்திக்கிறிஸ்துவைப் பற்றின வேறொரு வசனத்தை வாசிப்போம் -

**மத்தேயு 24:15**

"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த

ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது"

இங்கு "பாழாக்கும் அருவருப்பு" என்பது சாத்தானால் சிருஷ்டிக்கப்பட்ட, வஞ்சிக்கிற அந்திக்கிறிஸ்துவின் போலியான கிறிஸ்தவ அமைப்பாகும். இது 2தெசலோனிக்கேயர்2:7ல் கூறப்பட்டபடி, அக்கிரமத்தின் இரகசியமாகவும் இருந்து, வேத சத்திய போதனைகளாகிய மகா பரிசுத்தமான விசுவாசத்தை பாழாக்குகிறதாக உள்ளது. இதைக்குறித்து நம் ஆண்டவராகிய இயேசு எச்சரிப்பதை காண்கிறோம் -

**யோவான் 5:43**

"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும்
நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை.
வேறொருவன் தன் சுயநாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்"

இங்கு எதிர்காலத்தில் உருவாகும் அந்திக்கிறிஸ்து அமைப்பைக் குறித்தும், அதன் வளர்ச்சியைக் குறித்தும் இயேசு தீர்க்கதரிசனமாக கூறுகிறார். இந்த அமைப்பு எபேசியர்1:22ல் சொல்லப்பட்டபடி, இயேசுவை தலையாகவும் அவரது சரீரஅங்கங்களை சரீரமாகவும் கொண்டிராமல், இயேசுவின் நாமத்தை போலியாகத் தரித்த போப்பை தலையாகவும், அதன் அங்கத்தினரை சரீரமாகவும் கொண்டிருக்கும்.

அந்திக்கிறிஸ்து அமைப்பைக் குறித்து தொடர்ந்து வாசிப்போம் -

**தானியேல் 7:21**

"நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய
பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச்
சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும் .."

இது வேத சத்தியங்களை விசுவாசித்த உண்மையான கிறிஸ்தவர்களுக்கு எதிராக போப்புமார்க்கம் நிறைவேற்றின கொடுமையான சித்திரவதைகளைக் குறிக்கும். இருண்ட யுகம் என்று அழைக்கப்படும் இந்தக் காலமாகிய 1300 வருடங்களில் போப்பு மார்க்கம் ஐந்துகோடி ஜனங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ கொலைசெய்தது. இக் கொலைகள் அனைத்தும் "பரிசுத்த விசாரணை" என்ற முறையிலேயே செய்யப்பட்டது.





கொலைசெய்யப் பயன்படுத்தப்பட்ட முறைகள் காட்டுமிராண்டித்தனமானவை, ஈவு இரக்கமற்றவை.

☞ சாகும்வரை எரிப்பது - உண்மைக் கிறிஸ்தவர் கம்பத்தில் கட்டப்பட்டு, சுற்றிலுமாக தீ மூட்டப்பட்டு, அக்கினியில் வதைக்கப்பட்டு கொல்லப்பட்டனர்

☞ குத்திக் கொல்லப்படுதல், ஈயம் காய்ச்சி காதுகளில் ஊற்றுதல்,

☞ கத்திகள் பொருத்தப்பட்ட சக்கரத்திற்கு அடியில்

போடப்பட்டு துண்டாக்கப்பட்டு மரித்தனர்

☞ அநேகருடைய கண்கள் பிடுங்கி எடுக்கப்பட்டது, நகங்களும் பிடுங்கப்பட்டன

☞ சில சமயம் உயரத்திலிருந்து தள்ளப்பட்டு, கீழே செங்குத்தாககுத்தி வைக்கப்பட்ட இரும்புக் கம்பிகள் மீது விழுந்து இரத்தம் வழிந்து மரித்தனர்.

☞ சிலரது வாயில் வெடி மருந்துகள் நிரப்பப்பட்டு, நெருப்பு பற்றவைக்கப்பட்டு தலை சிதறி மரித்தனர்

☞ சிலர் நீண்ட காலம் பசியால் அவதிப்பட்டு மரித்தனர்

☞ சிலரது சரீரங்கள் வெடிக்கும்வரை காற்றடித்து மரிக்கச்செய்தனர்

☞ சிலர் வெட்டியெடுக்கப்பட்ட தங்களுடைய சரீர பாகங்களையே வாயில் திணிக்கப்பட்டு மரித்தனர்

☞ சிலருடைய வாயில் மனிதக் கழிவுகள் திணிக்கப்பட்டது

☞ ஸ்திரீகள் அவர்களுடைய தலைமயிற்றினால் தொங்கவிடப்பட்டனர்

☞ சிலர் கத்தி பொருத்தப்பட்ட மரியாளின் உருவச் சிலைக்கு முன்பாக கொண்டுபோய் நிறுத்தப்பட்டு, வேதவிசுவாசத்தை மறுதலிக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். மறுத்தவர்கள், மரியாளின் சிலையை அணைக்கும்படி, பின்னிருந்து ஈட்டியால் குத்தப்பட்டு, கத்திபாய்ந்து இறந்தனர்.

இன்னும் விவரிக்க முடியாத கொடூரமானமுறைகளில் கிறிஸ்தவர்கள் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டனர்.

☞ இவையனைத்தும் தேவனுடைய நாமத்திலும் கிறிஸ்துவின் நாமத்திலும் நிறைவேற்றப்பட்டது.

☞ இப்படிப்பட்ட கொடூரங்களைச் செய்ததற்காக சமீபத்தில் காலமான போப் இரண்டாம் ஜான் பால் பொதுமன்னிப்புக் கோரினார். இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பின் கொடுமைகளை தரிசனத்தில் கண்டபொழுது அப்போஸ்தலனாகிய யோவான் கண்டு உணர்ந்ததாக அவர் எழுதினவைகளை காண்போம்-

**வெளிப்படுத்தல் 17: 6**

"அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன். அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன் "

இங்கு அந்த ஸ்திரீ இரத்தவெறி கொண்டிருக்கிறதைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகயோவான் கூறுகிறார். ஆச்சரியப்பட்டேன் என்ற பதம் அதிர்ச்சியடைந்தேன் என்பதே மூல பாஷையின் சரியான மொழிபெயர்ப்பு.

மேலும் அந்திக்கிறிஸ்து அமைப்பை தீர்க்கதரிசனத்தில் பார்த்த தானியேல் கூறுகையில் -

**தானியேல் 7:28**

" அவன் சொன்ன வார்த்தை இத்தோடே முடிந்தது.தானியேலாகிய நான் என் நினைவுகளால் மிகவும் கலங்கினேன். என் முகம் வேறுபட்டது. இந்தக் காரியத்தை என் மனதிலே வைத்துக்கொண்டேன்"

தானியேல் இக்காட்சியைக் கண்டு மிகவும் கலக்கமுற்றார். மேலும் அவர் இந்த அமைப்பை வேறொரு தரிசனத்தில் கண்டு, வியாதிப்பட்டதாக வாசிக்கிறோம் -

**தானியேல் 8:27**

" தானியேலாகிய நான் சோர்வடைந்து, சிலநாள் வியாதிப்பட்டிருந்தேன், பின்பு நான் எழுந்திருந்து, ராஜாவின் வேலையைச் செய்து, அந்தத் தரிசனத்தினால் திகைத்துக்கொண்டிருந்தேன், ஒருவரும் அதை அறியவில்லை"

அன்பான சகோதர சகோதரிகளே, இது வரை அந்திக்கிறிஸ்து அமைப்பைக் குறித்து நாம் வாசித்தவைகள்ஒரு பாதி தான்.

இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பாகிய போப்பு மார்க்கம் நம் மத்தியில் இருப்பதை இன்றும் நாம் காண்கிறோம் அல்லவா, இதற்கு என்ன சம்பவிக்கும்?

இந்த அந்திக்கிறிஸ்து அமைப்பிற்கான இறுதி நியாயத்தீர்ப்பு என்ன? இதைக் குறித்து வேத வசனங்கள் போதிப்பது என்ன?

அந்திக்கிறிஸ்து குறித்த நம் ஆராய்ச்சியின் அடுத்த வகுப்பில் இவைகளுக்கான விடைகளை வெளிப்படுத்தின புத்தகத்திலிருந்து ஆராய்வோம்.

**தேவகிருபை நம் அனைவரோடும்கூட இருப்பதாக ஆமென்.**

---

## The No : 666

The ancient Greek for "The Latin Kingdom" is HE LATINE BASILEIA
BASILEIA is Strong's # G932 The ancient Greek for "Italian Church" is ITALIKAEKKLESIA
EKKLESIA is Strong's # G1577 And in ancient Greek the word APOSTATES
And in ancient Greek the word for "tradition" PARADOSIS Strong's # G3862

H = 0 (transliterated)
E = 8 eta

L = 30 lambda
A = 1 alpha
T = 300 tau
I = 10 iota
N = 50 nu
E = 8 eta

B = 2 beta
A = 1 alpha
S = 200 sigma
I = 10 iota
L = 30 lambda
E = 5 epsilon
I = 10 iota
A = 1 alpha

666

I = 10 iota
T = 300 tau
A = 1 alpha
L = 30 lambda
I = 10 iota
K = 20 kappa
A = 1 alpha

E = 5 epsilon
K = 20 kappa
K = 20 kappa
L = 30 lambda
E = 8 eta
S = 200 sigma
I = 10 iota
A = 1 alpha

666

A = 1 alpha
P = 80 pi
O = 70 omicron
ST = 6 stigma*
A = 1 alpha
T = 300 tau
E = 8 eta
S = 200 sigma

666

*Stigma is a now obsolete Greek character, but it appears in the New Testament in Rev 13:18 to give the value 666 (chi xi stigma-See Strongs Concordance, # G5516).

P = 80 pi
A = 1 alpha
R = 100 rho
A = 1 alpha
D = 4 delta
O = 70 omicron
S = 200 sigma
I = 10 iota
S = 200 sigma

666

LATIN

DUX CLERI
translated means
Captain of the Clergy
D = 500
U = 5
X = 10
C = 100
L = 50
E = no value
R = no value
I = 1
--------------------
666

LUDOVICUS
translated means
Vicar of the Court
L = 50
U = 5
D = 500
O = no value
V = 5
I = 1
C = 100
U = 5
S = no value
--------------------
666

HEBREW

The numeric equivalents of Hebrew letters can be found in the Encyclopedia Britannica under "Languages of the World", Table 50.

ROMIITH
means the Roman Kingdom
R = 200 resh
O = 6 waw (vav)
M = 40 mem
I = 10 yod
I = 10 yod
TH = 400 taw
--------------
666

ROMITI
means the Roman Man
R = 200 resh
O = 6 waw (vav)
M = 40 mem
I = 10 yod
T = 400 taw
I = 10 yod
----------
666

GREEK

The numeric equivalents of Greek letters can also be found in the Encyclopedia Britannica under "Languages of the World", Table 8.

The ancient Greek word for "the Latin speaking man" is LATEINOS
L = 30 lambda
A = 1 alpha
T = 300 tau
E = 5 epsilon
I = 10 iota
N = 50 nu
O = 70 omicron
S = 200 sigma
------------
666

இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/